**රාජ්‍ය පාලනය, යුක්තිය සහ සිවිල් ආරක්ෂණය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව**

**වෙත යොමු කරන ලද**

**දණ්ඩ නීති සංග්‍රහය (සංශෝධන) පනත් කෙටුම්පත**

**සම්බන්ධයෙන්**

**රාජ්‍ය පාලනය, යුක්තිය සහ සිවිල් ආරක්ෂණය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව**

**පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ**

**රාජ්‍ය පාලනය, යුක්තිය සහ සිවිල් ආරක්ෂණය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති**

**ගරු (වෛද්‍ය) නජිත් ඉන්දික මහතා, පා.ම. විසිනි**

**2025 සැප්තැම්බර් මස 24 වැනි බදාදා**

---

**ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு**

**ஆற்றுப்படுத்தப்பட்ட**

**தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம்**

**மீதான**

**ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கை**

**ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர்**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க, பா.உ., அவர்களால்**

**பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.**

**2025 செப்டெம்பர் 24 ஆம் திகதி புதன்கிழமை**

---

# Report of the
# Sectoral Oversight Committee on Governance, Justice and Civil Protection
# on
# Penal Code (Amendment) Bill

**referred to Sectoral Oversight Committee on Governance, Justice and Civil Protection**

**Presented to Parliament by**

**Hon. (Dr.) Najith Indika,M.P.**

**Chair of the Sectoral Oversight Committee on**
**Governance, Justice and Civil Protection**

**Wednesday, 24 September 2025**

**குழுவின் அறிக்கை**

2025 செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் கீழே குறிப்பிடப்பட்ட சட்டமூலம் பரிசீலனை செய்யப்பட்டது.

- தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம்
  (2025 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

**பங்கேற்ற குழு உறுப்பினர்கள்:**
கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க, பா.உ. (தவிசாளர்)
கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ.
கௌரவ எம்.கே.எம். அஸ்லம், பா.உ.
கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ, பா.உ.
கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்
கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார, பா.உ.

**பங்கேற்ற குழு உறுப்பினர் அல்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள்:**
கௌரவ அஜித் பி. பெரேரா, பா.உ.,
கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே, பா.உ.,
கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன,, பா.உ.,
கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து, பா.உ.,

திருமதி. சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) - குழுவின் செயலாளர்

**பங்கேற்ற அதிகாரிகள்:**
**சட்டமா அதிபர் திணைக்களம்**
திரு. சஜித் பண்டார, அரச சட்டத்தரணி

**சட்ட வரைஞர் திணைக்களம்**
திருமதி. டி.எம்.கே.டீ.கே. திசாநாயக்க, உதவிச் சட்ட வரைஞர்

**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு**
திருமதி. பியுமன்தி பீரிஸ், மேலதிக செயலாளர் (சட்டம்)
திருமதி. சந்திமா வெலிகல, சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்)
திருமதி. லிலானி கனேகம, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரின் பணியாட்டொகுதி

**மகளிர் மற்றும் சிறுவர்அலுவல்கள் அமைச்சு**
திருமதி. குமுது பெரேரா, சட்ட அலுவலர்

**இலங்கை சட்டக் கல்லூரி**
சனாதிபதி சட்டத்தரணி டபிள்யு.எம். பிரஷாந்த லால் த அல்விஸ், அதிபர்

**அறிமுகம்**

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் ஆனது, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையை (சரீரத் தண்டனைகள்) திருத்தம் செய்வதற்கான ஒரு சட்டமூலமாகும். சரீரத் தண்டனைகள் மூலம் பிள்ளைகளுக்கு ஏற்படும் உடல்சார் மற்றும் உளவியல்சார் துன்புறுத்தல் ஆனது பரந்தளவானது என்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, எந்தவொரு துறையிலும் சரீரத் தண்டனைகள் மூலம் துன்புறுத்துவதை தடைசெய்வதற்காகவும், சரீரத் துன்புறுத்தலுக்கு தண்டனை விதிப்பதற்காகவும் ஏற்பாடுகளை விதிக்கும் பொருட்டு (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவது இதன் நோக்கமாகும்.

**குழுவின் அவதானிப்புகள்**

1. “வேண்டுமென்றே” என்பது ஒரு திட்டமிட்ட செயலாக உயர் நீதிமன்றத்தினால் வரையறுக்கப்பட்டுள்ளதால், உடனடியாக இடம்பெறும் கொடூரச் செயல்கள் தொடர்பில் வழக்குத் தொடுப்பது கடினமாக இருந்ததாகவும், இந்த சட்டமூலத்தின் மூலம் 308அ பிரிவில் இருந்த “வேண்டுமென்றே” (wilfully) என்ற சொல்லை, "உளக்கருத்துடன்" (intentionally) என மாற்றுவதன்

மூலம், ஏனைய பாரதூரமான குற்றங்களுக்குப் பயன்படுத்தப்படும் நியமங்களுடன் இணைக்க முடியும்.

2. ஆசிரியர்களால் தண்டனையை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் பாடசாலை மாணவத் தலைவர்கள் போன்ற 18 வயதுக்குக் குறைந்த குற்றவாளிகளுக்கான தண்டனை தளர்த்தப்பட்டுள்ளதுடன், அது ஆறு மாதங்களுக்குக் குறைந்த காலத்திற்கான மறியற்றண்டனையாக அமையலாம்.
3. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைக்கு எதிர்காலத்தில் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தத்தின் மூலம் தண்டனை விதிக்கும் போது நீதிபதியின் தற்றுணிபின்படி சிறைத் தண்டனை விதிக்காமல் வேறு தண்டனை வழங்கவும், அதற்கு மேலதிகமாக உளவியல் சிகிச்சை வழங்க தீர்மானிக்கவும் முடியும் என்பதும், இதன் மூலம் ஆசிரியர்களிடம் தனிப்பட்ட ரீதியில் பழிவாங்குவதற்காக இந்தச் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுக்க முடியும்.
4. தண்டனைச் சட்டக்கோவையின் 74 ஆம் பிரிவு மற்றும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 303, 306 மற்றும் 307 ஆம் பிரிவுகளின் மூலம் ஏற்கனவே ஆசிரியர்களுக்கு சட்ட ரீதியாக பாதுகாப்பு கிடைக்கின்றது.

**<u>குழுவின் தீர்மானங்கள்</u>**

பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர், குழு தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் தொடர்பாக இணக்கம் தெரிவித்ததோடு, அது தொடர்பில் தயாரிக்கப்பட்ட குழுவின் இந்த அறிக்கை குழுவின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க அவர்களால் 2025 செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்தது.